සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

# දෙවන වාර පරීක්ෂණය - 2025
## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025/ Second Term Test - 2025

ශ්‍රේණිය / தரம் / Grade: 10

## வரலாறு - I

කාලය / நேரம் / Time: 01 மணி.

නම / பெயர் / Name ..............................................................................

විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ....................................

- ❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக. இவ் வினாத்தாளுக்கு 80 புள்ளிகள் வழங்கப்படும்.
- ❖ 1 – 40 வரையான வினாக்களில் வழங்கப்பட்டுள்ள விடைகளில் இருந்து சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்து விடைத்தாளில் புள்ளடி இடுக.

---

1) இலங்கை வரலாறு தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியுமான மிகப் புராதன மூலாதாரம்,

   1. மகாவம்சம் 2. தீபவம்சம் 3. தாதுவம்சம் 4. தூபவம்சம்

2) "மகாவம்ச டீகாவ" என அழைக்கப்படும் நூல் யாது ?

   1. தீபவம்சம் 2. வம்சத்தப்பகாசினி 3. நிகாய சங்கிரஹய 4. இராஜவலிய

3) இந்நாட்டின் புத்தசாசன வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு எழுதப்பட்ட வரலாற்று நூல்,

   1. இராஜவலிய 2. போதிவங்சய 3. பூஜாவலிய 4. நிகாய சங்கிரஹய

4) "நாணய விஞ்ஞனம்" எனும் கலைத்திட்டம் மூலம் பயிலப்படும் அம்சம் யாது ?

   1. உலோக கைத்தொழில் 2. கட்டிட நிர்மாணக்கலை
   3. மட்பாண்டக் கைத்தொழில் 4. புராதன நாணயம்

5) அநுராதபுர யுகத்தின் ஆரம்ப கால கல்வெட்டுக்களில் பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?

   1. ஒரோஷ்டி எழுத்துக்கள் 2. பிராஹ்மி எழுத்துக்கள் 3. மாகதி எழுத்துக்கள் 4. பிரகிருத எழுத்துக்கள்

6) கற்பாறைகள் மீது எழுதப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?

   1. குன்றுக் கல்வெட்டு 2. குகைக் கல்வெட்டு 3. தூண் கல்வெட்டு 4. சுவர்க் கல்வெட்டு

7) வரலாற்றுக்கு முற்பட்ட கால தொழிநுட்பங்களை அறிந்து கொள்வதற்கு முடியுமான ஒரேயொரு ஆதாரம் யாது ?

   1. உலோக உபகரணங்கள் 2. மட்பாத்திரங்கள் 3. மயானங்கள் 4. கல்லாயுதங்கள்

8) வரலாற்றுக்கு முற்பட்ட கால மக்கள் உணவாக பயன்படுத்திய நத்தைகள் அதிகமாக காணப்படும் சுற்றாடல் வலயம் யாது ?

   1. தாழ்நில உலர்வலயம் 2. தாழ்நில ஈரவலயம்
   3. அரைகுறை வறள் வலயம் 4. மலைநாட்டு உலர்வலயம்

9) ஹோமோசெபியன் மானிட வர்க்கத்தினர் இலங்கையில் வாழ்ந்ததாக கருதப்படும் காலகட்டம் இன்றிலிருந்து எத்தனை வருடங்களுக்கு முன்னராகும் ?

1. 125000 2. 80000 3. 35000 4. 28000

10) இலங்கையின் இரும்பு உலோகப்பாவனை தொடர்பான புராதன தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப்பெறுவது,

1. கற்காலத்திலாகும் 2. முன் வரலாற்றுக் காலத்திலாகும்

3. வரலாற்றுக் கால ஆரம்ப பகுதியிலாகும் 4. வரலாற்றுக் காலத்திலாகும்

11) வரலாற்றுக்கால ஆரம்ப காலத்தில் வாழ்ந்த மக்கள் ஆற்றுப் பள்ளத்தாக்குகளுக்கு அப்பால் தமது வாழிடங்களை அமைத்துக் கொண்டமைக்கான காரணம் யாது ?

1. வெள்ளப் பெருக்கிலிருந்து தற்காத்துக் கொள்ளல்

2. வனவிலங்குகளிலிருந்து பாதுகாப்புப் பெறல்

3. சேனைப் பயிர்ச்செய்கைக்கு பொருத்தமான சூழல் காணப்படல்

4. போக்குவரத்து வசதிக்காக

12) புராதன இலங்கையில் துறைமுகங்களுக்கு அண்மையில் அமைந்த குடியிருப்புக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன ?

1. கேவட்ட காம 2. கசீகார காம 3. வட்டகீ காம 4. பட்டான காம

13) வரலாற்றுக்கால முற்பகுதிக்குரிய காலத்தில் இலங்கையின் குடியேற்றப்பரம்பல் தொடர்பான தெளிவைப் பெற்றுக் கொள்ள உதவும் தகவல் யாது?

1. கிராமிய குளங்களின் பரம்பல் 2. கற்குகைகளின் பரம்பல்

3. செங்கபில மண்படிவின் பரம்பல் 4. சமவெளிகளின் அமைவு

14) வரலாற்றுக்கால முற்பகுதியில் ஆற்றுச் சமவெளிகளுக்கு அப்பால் அமையப் பெற்ற குடியேற்றவாசிகள் வாழ்வாதார முறையாகப் பயன்படுத்தியது யாது ?

1. விலங்கு வளர்ப்பு 2. தாழ்நிலப் பயிர்ச்செய்கை 3. சேனைப் பயிர்ச்செய்கை 4. வர்த்தகம்

15) முதன்முதலாக நாட்டின் கிராம எல்லைகளை அமைத்த மன்னன் யார் ?

1. பண்டுகாபயன் 2. தேவநம்பியதீசன் 3. வசபன் 4. மகா பராக்கிரமபாகு

16) அரச கோட்பாட்டு வளர்ச்சியுடன் “நரேஸ்வர” என தன்னை அறிமுகப்படுத்திய மன்னன் யார் ?

1. துட்டகைமுனு 2. பாதிகாபயன் 3. குட்டகண்ண அபய 4. கீர்த்தி சிறீ நிஸ்ஸங்கமல்லன்

17) கிரிந்தி ஓயாவை பயன்படுத்தி திஸ்ஸமஹராம வாவியை அமைத்த மன்னன் யார் ?

1. தாதுசேனன் 2. வசபன் 3. மகாசேனன் 4. இளநாகன்

18) அரச உரிமை தந்தையின் பின் மகனுக்கு உரித்தான ஒரு சந்தர்ப்பமாவது,

1. தேவநம்பியதீச மன்னனின் பின் உத்திய அரசனாதல்

2. காவன்தீச மன்னனின் பின் மூத்தசிவன் அரசனாதல்

3. வசபமன்னனின் பின் வங்கநாசகதிஸ்ஸ அரசனாதல்

4. துட்டகைமுனுவின் பின் சத்தாதிஸ்ஸ அரசனாதல்

19) புராதான இலங்கையில் பருமகமார்களிடம் இருந்த அரசியல் அதிகாரத்தை ஒருங்கமைக்கப்பட்ட ஆட்சிமுறையாக மாற்றியமைத்த முதலாவது ஆட்சியாளன் யார் ?

1. பண்டுகாபயன் 2. துட்டகைமுனு 3. காவன்திஸ்ஸன் 4. வசபன்

20) அநுராதபுர பகுதியில் வாழ்ந்த கிராமிய மக்கள் கைவிடப்பட்ட சேனையை மீண்டும் பயிரிட ஆரம்பித்தமையை எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது ?

1. நவதெனி சேனை 2. செஹென் 3. கனத்த 4. பிடபிம்

21) புராதன இலக்கிய மூலாதாரங்களில் "வெஜ்ஜசாலா" என அழைக்கப்படுவது யாது ?

1. வைத்தியசாலை 2. பன்சல 3. தானசாலா 4. கற்குகை

22) புராதன வர்த்தக நிலையங்கள் திட்டமிடப்பட்ட முறையில் செயல்பட்டது என்பதை உறுதி செய்ய முடியுமான கல்வெட்டு யாது ?

1. கொண்டவட்டவான் தூண் கல்வெட்டு 2. மண்டகல கல்வெட்டு
3. ஹோபிடிகம தூண் கல்வெட்டு 4. வேவல்கெட்டிய கல்வெட்டு

23) ஹேமமாலா இளவரசியும், தந்த குமாரனும் புனித தந்ததாதுவை எத் துறைமுகம் வழியாக இலங்கைக்கு கொண்டு வந்தார்கள் ?

1. ஜம்புகோளபட்டணம் 2. லங்காபட்டுண 3. மஹாதித்த 4. கோகண்ணதித்த

24) அரேபியர்கள் இலங்கையை எப் பெயர் கொண்டு அழைத்தனர் ?

1. தப்ரபேன் 2. செய்லான் 3. சிலோன் 4. செரண்டீப்

25) திரிபீடகம் நூலுக்கு அட்டுவா எனும் விளக்க நூல் எழுதிய வெளிநாட்டு பிக்கு யார் ?

1. புத்தகோச தேரர் 2. ஹியுங்சாங் பிக்கு 3. பாஹியன் பிக்கு 4. மஹிந்த தேரர்

26) சிவனொலிபாதமலையை "ஆதம் மலை" என்ற நம்பிக்கையுடன் வழிபாடு செய்தவர்கள் யார் ?

1. கிறிஸ்தவர்கள் 2. பௌத்தர்கள் 3. இஸ்லாமியர்கள் 4. கத்தோலிக்கர்கள்

27) பொலன்னறுவை இராசதானிக்கு சமீபத்தில் அமைந்திருந்த சர்வதேச துறைமுகம் யாது ?

1. மாதொட 2. லங்காபட்டுண 3. கொடவாய 4. கோகண்ணதித்த

28) "அ","ஆ" நிரல்களை இணைத்து சரியான விடையை தெரிவு செய்க.

| (அ) | (ஆ) |
|---|---|
| 01) மகாசேனன் | A. கந்தளாய் வாவி |
| 02) தாதுசேனன் | B. திசா வாவி |
| 03) 2ம் அக்போ | C. கலா வாவி |
| 04) தேவநம்பியதீசன் | D. மின்னேரியா வாவி |

1. ABCD 2. BCAD 3. CABD 4. DCAB

29) ஒரு குளத்தின் முக்கியமான அங்கமான குளத்தின் மூலம் நீர் வெளியாகும் பகுதியில் சதுர வடிவில் பாறைகள் மூலம் அமைக்கப்பட்ட அம்சம் யாது ?

1. மதகு 2. கலிங்கல் தொட்டி 3. கலிங்கல் 4. அலைதாங்கி

30) அம்பன் கங்கையை மறித்து பல குளங்களுக்கு நீரைக் கொண்டு செல்வதற்காக அமைக்கப்பட்ட எலஹர கால்வாய் யாரால் அமைக்கப்பட்டது ?

1. தாதுசேனன் 2. மகாசேனன் 3. வசபன் 4. 2ம் முகலன்

31) புராதன கால மக்கள் பால்மடுயாகம் எனும் கிரியையை எந்த விலங்கின் பாதுகாப்புக்காக மேற்கொண்டார்கள் ?

1. மாடு 2. பன்றி 3. யானை 4. மயில்

32) எமது முன்னோர்கள் தூரத்தை அளவிட பயன்படுத்திய அளவீடு யாது ?

1. சுவர்ண 2. கரீசை 3. யொதுனை 4. குஞ்சா

33) 1ம் பராக்கிரமபாகு பிறந்த இடம் யாது ?

1. பொலன்னறுவை 2. புங்ககாம 3. கேகாலை 4. தெடிகம

34) "அசையா நீர் விஞ்ஞானமுறை" முற்காலத்தில் பயன்படுத்தப்பட்டமையை நிரூபிக்கக்கூடிய நிர்மாணம் யாது ?

1. இரும்பு பதப்படுத்தும் ஆலை 2. கற்பாலம் 3. தெடிகம யானை விளக்கு 4. உலோக கத்தரிக்கோல்

35) கல்வெட்டுக்களில் "குடின்" என குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளவர்கள் யாவர் ?

1. தனவந்த வர்த்தக தலைவர்கள் 2. வேலையாட்கள் 3. வைத்தியர்கள் 4. பொதுமக்கள்

36) அரசனுக்கு சொந்தமான நிலங்களில் பயிர் செய்தவர்களிடம் அறவிடப்பட்ட வரி,

1. தக்கபதி 2. கெதிஅட 3. போஜக்கபதி 4. மதரமஞ்சக்க

37) குற்றவியல் சட்டங்கள் தொடர்பாக அரசர்கள் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தார்கள் என குறிப்பிடப்பட்டுள்ள கல்வெட்டு,

1. வேவல்கெட்டிய கல்வெட்டு 2. மிகிந்தலை கல்வெட்டு
3. வெஸ்ஸகிரிய கல்வெட்டு 4. கொண்டவெட்டுவான் கல்வெட்டு

38) தனது மகள் திருமணமாக புகுந்த வீடு செல்லும் போது "எனது மகளுக்கு தயிர் உண்பதற்கு ஒரு சோடி மாடும் தேவைப்படுமே"என தந்தை கூறுவதாக குறிப்பிடப்பட்டுள்ள நூல் யாது ?

1. சத்தர்மலங்காரய 2. பூஜாவலிய 3. சத்தர்மரத்னாவலிய 4. தம்பியா அட்டுவா கெடபதய

39) எமது முன்னோர்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் தொடர்பான சரியான கூற்று யாது ?

1. தானிய வகைகளை மாத்திரம் உண்ணல்
2. கஞ்சி வகைகளின் பக்கம் அதிகம் கவனம் செலுத்துதல்
3. செயற்கை உணவுகளையும் பயன்படுத்தல்
4. தமது சூழலிலுள்ள உணவு வகைகளை மாத்திரம் போசனைத் தன்மை பாதிப்படையாத வண்ணம் தயாரித்து உண்ணல்.

40) வட இந்தியா வியாபாரிகள் எமது நாட்டிற்கு எடுத்து வந்த "ஹஸ்ஸபு" நாணயங்களை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்ட உலோகம் யாது ?

1. தங்கம் 2. செப்பு 3. வெள்ளி 4. வெண்கலம்

($2 \times 40 = 80$ புள்ளிகள்)

Past Papers Wiki

සියලුම හිමිකම් ඇවිරිණි/முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved

දකුණු පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
தென் மாகாணக் கல்வித் திணைக்களம்
Department of Education, Southern Province

දෙවන වාර පරීක්ෂණය - 2025
இரண்டாம் தவணைப் பரீட்சை - 2025/ Second Term Test - 2025

| ශ්‍රේණිය / தரம் / Grade | 10 | வரலாறு - II | කාලය / நேரம் / Time | 03 மணி. 10 நி. |
|---|---|---|---|---|

නම / பெயர் / Name ........................................ විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ..........................

அறிவுறுத்தல்கள்

- ❖ பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- ❖ பகுதி II ல் நான்கு வினாக்களுக்கும் பகுதி III ல் ஒரு வினாவுக்கும் விடை தருக.
- ❖ விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்களின் எண்ணிக்கை ஆறாகும்.

## பகுதி I

01) (அ) வினா I ல் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும், வினா IIல் வழங்கப்பட்டுள்ள இடங்களை உலகப்படத்திலும் குறித்துப் பெயரிடுக.

I. ஜம்புகோளபட்டினம், தேவநகர், யோதவாவி, தெதுறு ஓயா, கோட்டே, வளவ கங்கை, பராக்கிரம சமுத்திரம், அநுராதபுரம், பாஹியன்கல, சீகிரியா, கோகண்ணதித்த, மட்டக்களப்பு (12 புள்ளிகள்)

II. போர்த்துக்கல், செங்கடல், கள்ளிக்கோட்டை, பத்தேவியா, சீனா, மலாக்கா தீபகற்பம் (06 புள்ளிகள்)

(ஆ) பின்வரும் A, B, C, D வினாக்களுக்கான விடைகளை ஒழுங்குமுறைப்படி விடைத்தாளில் எழுதுக.

A - இலங்கையின் நீளமான கல்வெட்டான கல்பொத்த கல்வெட்டை அமைத்த மன்னன் யார் ?

B - பாரிய குளங்களை அமைக்க ஆரம்பித்த மன்னன் யார் ?

C - மட்பாண்டங்களை வடிவமைக்க பயன்படுத்தப்படும் உபகரணம் யாது ?

D - குளத்தின் அலைகளால் குளக்கட்டு பதிப்படையாது பாதுகாக்க அமைக்கப்பட்ட அமைப்பு யாது?

(04 புள்ளிகள்)

- A, B யில் உள்ள உருக்களை அவதானித்து வினாக்களுக்கு விடை தருக.

A. I. உரு A யில் காட்டப்படுவது யாது ?

II. இது எங்கு கண்டுபிடிக்கப்பட்டது ?

III. இது எக்காலப்பகுதிக்கு உரியதாகும் ?

IV. இதனை யார் பயன்படுத்தியுள்ளார்கள் ?

(04 புள்ளிகள்)



உரு A

B. I. உரு B யில் காட்டப்படுவது யாது ?

II. இதனை எங்கு காணலாம் ?

III. இதனை அமைத்த அரசன் யார் ?

IV. இதனால் உணர்த்தப்படுவது யாது ?

(04 புள்ளிகள்)



உரு B

## பகுதி II

02) I. வரலாற்றை கற்பதற்காக இலக்கிய மூலாதாரங்களை பயன்படுத்தும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் மூன்றை குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. பின்வரும் வினாக்களுக்கு ஒழுங்குமுறைப்படி விடை தருக.

A. கோட்டை காலத்தில் எழுதப்பட்ட புகழ் காவியம் யாது ?

B. ஆங்கில இனத்தை சேர்ந்த ரொபட் நொக்ஸ் எழுதிய நூல் யாது ?

C. பொலன்னறுவை இராசதானி காலத்தில் பயன்படுத்தப்பட்ட நாணயம் யாது ?

D. குதிரைத் தலையும் மனிதனும் எனும் சிற்பம் எங்கு அமைக்கப்பட்டுள்ளது ? (04 புள்ளிகள்)

III. A. புதைப்பொருள் மூலாதாரங்கள் அழிவடைதலில் செல்வாக்கு செலுத்தும் மனிதச் செயற்பாடுகள் இரண்டைக் குறிப்பிடுக.

B. புதைப்பொருள் மூலாதாரங்களை பாதுகாப்பதற்கு நீர் கூறும் ஆலோசனைகள் மூன்றை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

IV. வரலாறு கற்பதன் மூலம் நாம் அடையும் பயன்கள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

03) I. இலங்கையில் கற்கால மனிதர்கள் வாழ்ந்த சுற்றாடல் வலயங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. கற்கால மனிதர்கள் தமது வாழிடங்களை தெரிவு செய்யும் போது கவனம் செலுத்திய காரணிகள் இரண்டை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. A. கற்கால மனிதர்கள் உணவாக பயன்படுத்திய தாவர உணவுகள் இரண்டையும்

B. மாமிச உணவுகள் மூன்றையும் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

IV. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து கற்காலம் வேறுபடும் முறையை மூன்று காரணங்களூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

04) I. வரலாற்றுக்கால ஆரம்ப கால மக்கள் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய பிராதன காரணிகள் மூன்றையும் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் நான்கு வாபிகாமங்களை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. A. முன்வரலாற்றுக்காலம் எனக் கருதப்படும் காலப்பகுதி யாது ?

B. இலங்கையில் முன்வரலாற்றுக் கால கட்டத்தைச் சேர்ந்த மயானங்கள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள் மூன்றை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

IV. வரலாற்றுக்கால ஆரம்ப காலத்தின் குடியேற்றப் பரம்பலில் காணப்படும் இலட்சணங்கள் மூன்றை சுருக்கமாக தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

05) I. புராதன இலங்கையில் பின்வரும் பிரதானிகள் வகித்த பதவிக்கு ஏற்ப ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A. குடும்பப் பிரதானி

B. கிராமத் தலைவர்

C. குளத்தொகுதியை அல்லது சிறிய பிரதேசத்தை நிர்வகித்த நபர் (03 புள்ளிகள்)

II. மத்திய ஆட்சியுடன் தொடர்புடைய பின்வரும் காரியங்களை நிறைவேற்றியவர்களின் பதவிப்பெயர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக.

A. குதிரைப் பிரிவின் தலைவர்

B. உணவுச்சாலை அதிகாரி

C. வழக்கங்கள், மரபுமுறைகள் தொடர்பான அதிகாரி

D. நகர பரிபாலகர்

(பதகு, கொதுறுகேனா, நகர வடிக, அச அதெக, நகரகுத்திக, பன அதெக, கன பெடிக) (04 புள்ளிகள்)

III. அரசனால் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகள் இரண்டை உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

IV. வசப மன்னனின் ஆட்சிக்காலத்தின் முக்கியத்துவத்தை பின்வரும் விடயங்களூடாக தெளிவுபடுத்துக.

(A). பரிபாலனம் (அரசியல்)

(B). பொருளாதாரம் (06 புள்ளிகள்)

06) I. புராதன கால வெளிநாட்டு வர்த்தகத்துடன் தொடர்புடைய இலங்கையின் துறைமுகங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. புராதன இலங்கையில் காணப்பட்ட தொழிற்துறைகள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. 4ம் உதய மன்னனால் அமைக்கப்பட்ட சொரபொர வாவி தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தக சட்டங்கள் மூன்றை குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விளக்கிக் காட்டுக. (05 புள்ளிகள்)

IV. இந்நாட்டை ஆட்சி செய்த தலைச்சிறந்த அரசர்கள் அண்டை நாடுகளுடன் நல்லுறவை பேணி நடந்தார்கள் என்பதை மூன்று காரணிகளூடாக விளக்குக. (06 புள்ளிகள்)

07) I. பின்வரும் வினாக்களுக்கான விடைகளை ஒழுங்குமுறைப்படி எழுதுக.

A. நீரின் தரத்தையும், குளிர்ச்சியையும் பாதுகாக்க அமைக்கப்பட்ட கிணறு

B. இடி தாங்கிகளுக்கு புராதன காலத்தில் வழங்கப்பட்ட பெயர்

C. நீரைக் கட்டுப்படுத்த மடைக்கதவுடன் தொடர்புபடுத்தப்பட்டிருந்த கற்றூண் (03 புள்ளிகள்)

II. புராதன அரசர்கள் பாரிய குளங்களை அமைத்தமைக்கான நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. A. குளத்தின் பிரதான பகுதிகள் மூன்றைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

B. அவற்றில் ஏதாவது ஒன்றைப் பற்றி விளக்குக. (02 புள்ளிகள்)

IV. புராதன இரும்பு உலைகள் தொடர்பான சாட்சியங்கள் கிடைக்கப்பெற்ற இடங்கள் இரண்டை குறிப்பிட்டு, அவற்றில் இரும்பு உற்பத்தி நடைபெற்ற முறையை தெளிவுபடுத்துக. (06 புள்ளிகள்)

## பகுதி III

08) I. புராதன காலத்தில் சமூகத்தில் பிரபுக்களாக கருதப்பட்ட குழுக்கள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

II. இலங்கையின் பல்வேறு பிரதேசங்களில் கண்டுபிடிக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வகைகள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

III. புராதன காலத்தில் பெண்களும் அரச நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை இரண்டு உதாரணங்களுடன் விளக்குக. (05 புள்ளிகள்)

IV. புராதன மக்கள் உணவாக உட்கொண்டவற்றை பின்வரும் தலைப்புக்களின் கீழ் வேறுபடுத்திக் காட்டுக.

A. அதிகமாக பாவித்த தானிய வகைகள் இரண்டு

B. பிரபுக்களிடம் பிரபல்யம் பெற்ற உணவு

C. ஏழைகள் எளிதாக பெற்றுக் கொண்ட உணவு (06 புள்ளிகள்)

09) I. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

A. தானியங்களை வறுத்து தூளாக்கி தயாரிக்கப்பட்ட உணவு

B. “பலசரக்குப் பொருள்” என அழைக்கப்படுவது யாது ?

C. “திலசங்குலிகா” என அழைக்கப்பட்ட சிற்றுண்டி யாது ? (03 புள்ளிகள்)

II. புராதன கால மக்கள் மரக்கறி உணவுகளை சமைக்க பயன்படுத்திய முறைகள் நான்கை எழுதுக. (04 புள்ளிகள்)

III. சுற்றாடலை பாதுகாக்க அரசர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றை தெளிவுபடுத்துக.(05 புள்ளிகள்)

IV. புராதன கால மக்கள் தமது உடல் ஆராக்கியத்தை கவனித்து உணவுகளை உட்கொண்டார்கள் என்பதை இரண்டு விடயங்களூடாக தெளிவுபடுத்திக் காட்டுக. (06 புள்ளிகள்)

PAST PAPERS WIKI



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

| ශ්‍රේණිය / தரம் / Grade | 10 | ඉතිහාසය - வரலாறு - History - II |
| --- | --- | --- |

නම / பெயர் / Name ..................................................................................... විභාග අංකය / சுட்டிலக்கம் / Index No. ....................................



| | | |
|---|---|---|
| ශ්‍රේණිය<br>தரம்<br>Grade | 10 | ඉතිහාසය - வரலாறு - History - II |

නම<br>பெயர்<br>Name ...................................................................................... විභාග අංකය<br>சுட்டிலக்கம்<br>Index No. ......................................






සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

# 10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 200



Rs : 300



Rs : 350



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 200



Rs : 150



Rs : 300



Rs : 300



Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180


LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE